திருவள்ளுவராண்டு 2054

2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்

மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## ஆசிரியர் குழு

### தலைமை ஆசிரியர்


**முனைவர் அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
**மின்னஞ்சல்:** director@utsmdu.org


### ஆசிரியர் குழு (இந்தியா)


**முனைவர் வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** iits@tn.nic.in

**முனைவர் கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drarangapari@gmail.com

**முனைவர் வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
**மின்னஞ்சல்:** drramarajapandian@gmail.com

**முனைவர் தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
**மின்னஞ்சல்:** dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com


### ஆசிரியர் குழு (அயலகம்)


**திரு ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆசுதிரேலியா.
**மின்னஞ்சல்:** jeyaramiyer@yahoo.com.au

**முனைவர் சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
**மின்னஞ்சல்:** s.lingkumaran@gmail.com

**முனைவர் இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
**மின்னஞ்சல்:** prabu0111@gmail.com

**முனைவர் வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
**மின்னஞ்சல்:** jeevakumaran5@gmail.com

**முனைவர் ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
**மின்னஞ்சல்:** sivakumaran.r@nie.edu.sg


### செய்தி ஆசிரியர்


**முனைவர் சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை


### தொடர்புக்கு


0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை




### முகவரி


இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020

# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும் | பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | முனைவர் கு.கவிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | திருமதி ஜே.எஸ். ஷர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | முனைவர் ச. முருகேசன் | 128 |

# அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள்



**வை.நித்தியா**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
காஞ்சிமாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு
மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி - 605008.
மின்னஞ்சல் : puviabi@gmail.com

## முன்னுரை

இயற்கையில் மனதைப் பறிகொடுக்காத மனிதர்களே இல்லை என்ற அளவுக்கு இயற்கையைச் சுவைக்கும் மனப்பாங்கு மனிதர்களிடத்தில் செறிந்திருக்கின்றது. இட, இன, மொழி, பருவ, பால் வேறுபாடு இன்றி மானிடர் அனைவரையும் எக்காலத்தும் தன்னுள் ஈர்த்துக் கொண்டிருப்பது இயற்கை. மானிடர் மட்டுமின்றி அனைத்து உயிரினங்களின் வாழ்வும் தாழ்வும் இயற்கையைச் சார்ந்து மானிடரின் உயிர் மூச்சோடு ஒன்றி நிற்கின்றன. இதனையே, ஆங்கிலக் கவிஞன் 'John Keats' கூறிய "Beauty is Joy for ever" தமிழில் இயற்கை என்னும் சொல்லாட்சி தொல்காப்பியம் முதலே(502) வழங்கப்பட்டுள்ளது. கை புனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு என நக்கீரர் இதற்கு விளக்கமளிக்கிறார். மனிதனின் கைப்படாது ஐம்புலன்களின் ஏதேனும் ஒன்றால் அல்லது சிலவற்றால் அறியப்படும் பொருள் இயற்கையாகிறது. இயற்கையிலிருந்து தான் கவிஞன் பிறக்கிறான். இயற்கையைப் பாடாத கவிஞனே இருக்க முடியாது. வானம், பூமி, காற்று, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மழை, காடு என இயற்கையின் எழில் கொஞ்சும் இடங்களைப் பாடிக் கவிதையாக்கியுள்ளனர்.

இயற்கையின் அழகியல் குறித்து உரத்துச் சிந்தித்த தத்துவ அறிஞராகிய சார்ஜ் சண்டாயானா தனது (The Sonse of Beauty) 'தி சென்ஸ் ஆஃப் பியூட்டி' என்ற நூலின் இது குறித்து விரிவாக ஆராய்கிறார். இயற்கை என்பது தெளிவாக வரையறுக்க முடியாதது. அது தன்னைப் பல்வேறு முறைகளில் புரிந்து கொள்ள அனுமதி அளிக்கிறது. ஓர் இயற்கை காட்சியில் எந்தக் குறிப்பிட்ட விஷயத்தைத்

தேர்ந்தெடுத்துக் கொள்ள விரும்புகிறோமோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளச் சுதந்திரம் அளிக்கிறது. இனம் புரியாத உணர்ச்சி தூண்டல்களின் செறிவான எண்ணங்களின் புதையலாக இயற்கை விளங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார். இயற்கையின் செயல்பாட்டில் ஒரு கவிஞன் எப்படி இயங்க வேண்டும் என்று நம்மைச் சிந்திக்கத்தூண்டுகிறார். இயற்கை தன்னைத் தெளிவாக வரையறுத்துக் கொள்ளாமல் இனம் புரியாத உணர்ச்சி தூண்டல்களின் புதையலாக இருக்கும் காரணத்தால் கண்ணில் கவிஞன் எதை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை அது வழங்குகிறது.

இயற்கை எல்லை என்று நிற்கிறது. அதே நேரத்தில் இயற்கையின் ஒரு பார்வையாளனாகத் தன்னைப் பிரித்துப் பார்க்கிறோம். மனிதனே இயற்கை தனது ஒரு பகுதியாகவும் சேர்த்து அணைத்துக் கொள்கிறது. எனவே இயற்கை குறித்துக் கவிப்புலியும் கவிஞனின் முன்னாள் இரண்டு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. ஒன்று இயற்கையைப் புறத்தே இருந்து பார்ப்பது இன்னொன்று இயற்கையை அகற்றே இருந்து பார்ப்பது இந்த இரண்டு நிலைப்பாடுகளையும் கவிஞர் கையாண்டுள்ளார்.

இந்த நூற்றாண்டில் எங்கும் இயந்திரமயமான செயற்கை வாழ்வு பெருகி இயற்கை வளமும் வாழ்வும் அருகிய அவல நிலை கலைஞர் நாட்டத்தை வளர்த்தது செயற்கையின் ஆரவாரமான வளர்ச்சிகள் இல்லாத காலத்தில் இயற்கையின் வளங்களைக் கண்டு மகிழ்ந்த போது அதை வாழ்த்தியும் இயற்கையும் எல்லையற்ற ஆற்றல்களைக் கண்டபோது அதைப் பாராட்டியும் இயற்கையின் எதிர்பாராத இடர்களைக் கண்டபோது அஞ்சி வாழ்ந்துள்ளனர். நம் பழங்கால மக்கள் தமிழ் கவிஞர்களின் இயற்கை ஈடுபாடு வியக்கத்தக்க ஒன்றாகும். வாழ்ந்த சூழலின் இயற்கையோடு ஒன்றிக் கலந்ததால் ஏற்பட்ட விளைவு அவர்களது இயற்கை நேசமாகும்.

**“இயற்கையின் எழிலைக்**
**கைப்புனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு”**[1]

என டாக்டர் மு.கருணாநிதி நக்கீரனின் கூற்றை எடுத்துக்காட்டி, இயற்கை உலகைச் சூழ்ந்துள்ள பாங்கைக் கைப்புனைந்து இயற்றா அழகாகச் சூழ்ந்துள்ளன என்கிறார். இயற்கையின் அழகைக் கவிஞர்கள் இரசிக்கும் விதம் இனிமையானது.

**“இயற்கையே இன்ப வனங்கொடுக்குந் தாயாகக்**
**கதிராற் கடல்முகந்து கார்மேக நல்கி**
**யிதஞ் செய் யியற்கை யென்றாய்”**[2]

என்ற பாரதியின் வரிகளை எடுத்துக்காட்டி அவற்றில் கதிர் முகத்துக்கும் கடலாகவும் அச்செயலாளர் உருவான கார்மேகமாக உலகை வாழ வைக்கும் இயற்கை என இயற்கையைப் பாடும் விதத்தைக் கூறியுள்ளார்.

**“இயற்கை என்ற சொல் தனிமை இயல்பு**
**பொதுவான ஆற்றல் என்ற பொருள்களில்**
**கம்பன் காலம் வரையிலும் ஆளப்பட்டுள்ளது”**[3]

என்ற விளக்கத்தை முனைவர் நா.மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார்.

**“இயற்கையின் குழந்தையே கவிதை”**[4]

என இயற்கையின் சிறப்பு தன்மையைக் கூறியுள்ள பாங்கு எளிமையாக அதன் பொருளை உணர்த்துகிறது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்கையைக் கண்டு வியந்து இயற்கையின் அழகு இரசித்துள்ள பாங்கு ‘அழகின் சிரிப்பு’ என்ற நூலில் அழகாக மிளிர்கின்றன. ‘தென்றல்’ என்ற தலைப்பில் தென்றலின் பயனாக,

**“எழுதிக் கொண்டிருந்தேன் அங்கே**
**எழுதிய தாளும் கண்டாய்**
**வழியோடு வந்த நீயோ**
**வழக்கம்போல் இன்பம் தந்தாய்”**[5]

என்ற வரிகளில் தனது இயற்கை இரசனையைக் காட்டியுள்ளார்.

**இயற்கை சிந்தனைகள்**

**மந்தாரை - எழில்**

**மலைமுகட்டில் வெண்பனியும் தூங்குதே - உடன்**
**மனம் அங்குச் சென்றிடவே ஏங்குதே!**
**இலைதளிர்கள் பனித்துளியைத் தாங்குதே - மனம்**
**இதமான கவிதையடி வாங்குதே!**
**உலைகொதிக்கும் உற்சாகத் தளும்பலில் - பசி**
**உறவாடித் தாமதத்தை மறக்குதே!**
**குலை குலையாய்த் தொங்குகின்ற திராட்சையில் - எட்டிக்**
**குதிக்காமல் நாப்புளிப்பை உணருதே!”**[6]

எழில் எனும் கவிதைத் தலைப்பில் இக்கவிதை அமைந்துள்ளது. மலைப்பகுதியில் பனியின் அழகு வர்ணிக்கப்படுகிறது. இலைதளிர்மீது பனிதுளியின்

அழகான காட்சி மனதை இதமாக வருடிச்செல்கிறது. குலை குலையாய்த் தொங்குகின்ற திராட்சையைப் பார்க்கும்போதே நாக்கானது புளிப்புச் சுவையை உணருகிறது. இவ்வாறாக இயற்கை சிந்தனைகள் மந்தாரை கவிதைத் தொகுதிகளில் காணப்படுகிறது.

**மந்தாரை - பத்துமலை**

**“விண்ணின் கதிரவன் கரங்கள் நீட்டும்**
**தண்ணென் நிலவும் முகத்தைக் காட்டும்**
**பண்ணின் இசையைப் பறவைகள் கூட்டும்**
**பெண்ணின் கூந்தலாய் மேகம் மாட்டும்!”**[7]

பத்துமலை என்னும் கவிதைத் தலைப்பில் முருகன் குடியிருக்கும் மலையின் அழகு கூறப்படுகிறது. மலையில் இருக்கும் கதிரவன், நிலா, பறவைகள், மேகம் ஆகியவற்றின் அழகு மேலும் வர்ணிக்கப்படுகிறது.

**மந்தாரை - பட்டாம்பூச்சி**

**“மலர்க் குடுவையின் தேனை**
**உறிஞ்சிக் குடிக்கும்**
**ஊதுகுழாயைச் சுமக்கும்**
**நாகரீகப் பொறி ‘யாளன்’”**[8]

பட்டாம்பூச்சி என்னும் கவிதைத் தலைப்பில் இக்கவிதை அமைந்துள்ளது. தனக்குத்தானே சிறைத் தண்டனை விதித்துக் கொள்ளும் மனசாட்சியுள்ள பூச்சி, தன்னைத்தானே விடுவித்துக் கொள்ளும் சமூகப் போராளி, மலர்களுக்குள் ரகசியங்களைப் பரிமாற்றம் செய்யும் தூதுவன், மலர்களின் செயற்கைக் கருத்தரிப்பு மைய மருத்துவன், பல வண்ண ஆடைகளில் வலம்வரும் நடிகை, கிடைத்த வாழ்க்கையை அனுபவித்து நுகரும் ஜென் தத்துவ ஞானி என்று பட்டாம்பூச்சியின் இயற்கையழகு வர்ணிக்கப்படுகிறது.

**மந்தாரை - மஞ்சள் முகத்தி சூரியகாந்தி**

**“அதிகாலை நீராடி விட்டுக்**
**காதலனை**
**வழிமேல் விழி பார்த்திருக்கும்**
**மஞ்சள் முகத்தி**
**சூரியகாந்தி!”**[9]

மஞ்சள் முகத்தி சூரியகாந்தி என்னும் கவிதைத் தலைப்பில் இக்கவிதை அமைந்துள்ளது. இயற்கையான மஞ்சள் வண்ணம் கொண்ட சூரியகாந்தியின் இயற்கையழகு வர்ணிக்கப்படுகிறது.

**மந்தாரை - நெகிழி மரம்**

**"நெகிழி மரங்கள்**
**நெகிழி மலர்கள்**
**நெகிழிப் பூச்செண்டுகள்**
**அழியாத நெகிழி மாசு**
**வரம் சாபமாகிறது"** [10]

பசுமைவழிச் சாலை திட்டத்தினால் மரங்கள் வெட்டப்படுகின்றன. பச்சை வண்ணம் மரத்தின் குறியீடாகக் கருதப்படுகிறது. குடிக்கவே நீரில்லை. மரங்களுக்கும் நீர் தேவைப்படுகிறது. நீரும் வேண்டாம் நிலமும் வேண்டாம் என்றும் பச்சை வண்ணம் கொண்ட நெகிழி மரங்கள் வைப்போம்! வாருங்கள். அழியாத நெகிழி மாசு, வரமானது சாபமாகிறது. இவ்வாறாகக் கவிஞர் அவ்வை நிர்மலாவின் மந்தாரை கவிதைத் தொகுதிகளில் இயற்கை சிந்தனைகள் அதிகமாகவே காணப்படுகிறது.

**மந்தாரை - கடல்**

"கடல் ....அது பூமித்தாயின் **உடல்**
நீரின் திடல் அலைகளின் **படல்**
மீன்கள் நடத்தும் **செடல்**
பவளக்கொடிகளின் **குடல்**
காற்று அடிக்கும் **பெடல்**
நிலவு அதில் அணிந்த **மெடல்**
சூரியன் தினமும் **சுடல்**
மேகம் தவழ்ந்து **தொடல்**
அவை மழைக்கு எழுதும் **மடல்**
அதில் கழிவுகள் **இடல்**
மாசுநீர் **விடல்**
மீத்தேன் குழாய் **நடல்**
மாந்த இனத்தின் **அடல்**!" [11]

கடலில் கலக்கும் மாசுவினால் மனித இனத்திற்குத் தீங்கு ஏற்படுகிறது எனக் கவிதையில் கூறப்படுக்கிறது. மேலும், இயற்கை சிந்தனைகள் குறித்த கருத்தும் காணப்படுகிறது.

**மந்தாரை - வெட்டுக்கிளிகள்**

"மக்களின் ஆதிக்கம்
மனை**களாய்**
மாளிகை**களாய்**
மாடி வீடு**களாய்**
எஸ்டேட்டு**களாய்**
காபி தோட்டங்**களாய்**
ரப்பர் தோட்டங்**களாய்**
தொழிற்சாலை**களாய்**
மீத்தேன் கிணறு**களாய்**
அலைக்கற்றை**களாய்**
அவனது தேவை**களாய்**
அளவு கடந்தது!" [12]

வெட்டுக்கிளிகள் எனும் கவிதைத் தலைப்பில் இக்கவிதை அமைந்துள்ளது. மனித இனத்தின் சுயநலத்திற்காகக் காடுகள், மலைகள், நீர் நிலைகள் ஆகியவை அழிக்கப்பட்டன. இந்நிலை இப்படியே சென்றால் பஞ்ச அரக்கன் ஒவ்வொருவர் வீட்டிலும் நிரந்தரமாய் இடம் கேட்பான் என்று கவிஞர் அவ்வை நிர்மலா கூறுகிறார். இவ்வாறாக மந்தாரை கவிதைத் தொகுதிகளில் இயற்கை சிந்தனைகள் காணப்படுகிறது.

**முடிவுரை**

**பல்லுயிர் போற்றுவோம்**

**"செயற்கை உரங்கள் பூச்சிக் கொல்லி**
**புயலாய்ப் புற்றினை உருவாக்கிடுமே**
**இயற்கையைக் காப்போம் இயற்கையில் வாழ்வோம்**
**இயற்கை இன்பம் கண்டிட விழிப்போம்!"** [13]

இயற்கை அனைவருக்கும் உவப்பானதாக இருப்பதற்குக் காரணம் அது தன்னோடு உறவாடுபவனுக்குக் கொடுக்கும் சுதந்திரம். இயற்கை என்பது மதம்,

இனம், சாதி என்று வேறுபாடு பாராமல் யாருடனும் பேசத் தயாராக இருக்கிறது. அது திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டதல்ல. காண்பவனின் கவித்துவப் பண்பின் ஆழ அகலங்களுக்கு ஏற்பப் புதுப்புதுக் காட்சிகளைச் சிந்திக்கச் செய்கிறது. எனவே இயற்கையை ஒரு கண்ணாடி போலப் பயன்படுத்துகிறான் கவிஞன். கவிஞர் இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்டு பல கவிதைகளைப் படைத்துள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. **காத்தையன் வே., பாரதிதாசன், வாணிதாசன் கவிதைகளில் இயற்கைப் புனைவு**, ப – 10.
2. **மேலது**, ப – 38.
3. **மாணிக்கம் நா., மு.மேத்தாவின் புதுக்கவிதைச் சாதனைகள்**, ப – 102.
4. **மேலது**, ப – 103.
5. **பாவேந்தர் பாரதிதாசன், அழகின் சிரிப்பு**, ப – 6.
6. **அவ்வை நிர்மலா, மந்தாரை**, ப – 37.
7. **மேலது**, ப – 51.
8. **மேலது**, ப – 199.
9. **மேலது**, ப – 200.
10. **மேலது**, ப – 216.
11. **மேலது**, ப – 207.
12. **மேலது**, ப – 220.
13. **மேலது**, ப – 316.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712